உ

சிவமயம்

நாற்பதாவது

அகஸ்திய மகாமுனிவர்

# ஊத்துமுறை – 24

பாரப்பாஊத்துமுறை வகையைக்கேளு
 பக்குவமாயுருக்குமுறை தூருத்தியொன்று
சேரப்பாசத்துவகை தூருத்திநாலு
 செயமானநீற்றினமோ ரெட்டுமைந்தா
தேரப்பாவரண்வகை வுபசாரங்கள்
 செய்மார்க்கருங்குருமுன்னி லறிந்துகொண்டு
சேரப்பாகுருமுடித்து செந்தூரித்து
 சிவசிவாகேசரியை தினமும்நோக்கே. 1

காலம்

நோக்கடாஐப்பிசிமுதல் மூன்றுமாதம்
 நுண்மையுடனுருக்கினத்தாக் காலமாகும்
வாக்கடாதைமுதலாய் மூன்றுமாதம்
 மகத்தானசெயநீருக் காலமாகும்
தாக்கடாசித்திரைமுதல் மூன்றுமாதஞ்
 சங்கையுடன்குருமுடிக்குங் காலமாகுந்

தூக்கடாசூடிமுதல் மூன்றுமாதஞ்
சுத்தமுடன்றிருவகஞ்செந் தூரஞ்செய்யே 2

நீற்றினம்

செய்யப்பாநீற்றினத்தின் கருவைக்கேளு
சிவசிவாபுளுநாவி வீரம்பூரம்
மெய்யப்பாகுருவுண்டு சூதந்தாரம்
விதமானகார்முகியுஞ் சவுக்காரமுதலுஞ்
செய்யப்பாசற்குருவை யொன்பதிலுமைந்தா
திருவானநவலோகம் நீறிப்போகுங்
கையப்பாகைமுறையா யறிந்தாயானாற்
கசட்டற்றுவேதமுறை காணலாமே. 3

உருக்கினம்

காணவேவுருக்கினத்துச் சாக்கைக்கேளு
காரமுஞ்சவ்வாது வெடிசாரவுப்பு
பேணவேகண்டதொரு மால்தேவிவெள்ளை
பிலமானரங்குடனே ஆமணக்கங்குன்றி
கோணவேதேனுடனே புருவிலெச்சத்
தொகுத்தறிந்துகருமாணங் கண்டாயானா
லூணவேநவலோக முருகிப்போகு
முத்தமனேகண்டந்தேரா ரனேகங்காணே. 4

நவலோக உபசாரங்கள்

காணவேநவலோக வுபசாரங்கள்
கடிதானபாஷாண வகைகட்கெல்லாம்

பேணவேசெந்தூரஞ் செய்யநல்ல
பிலமானசரக்குவகை சொல்லக்கேளு
தோணவேமனோசிலை காரங்கெந்தி
சுத்தமுள்ளவப்பிரேகங் கெவுரிநத்தம்
பூணவேவெடியுப்பு யிதுவெல்லாந்தான்
புத்தியுடன்செந்தூரத்தின் குருவைப்பாரே. 5

வாணவகை சரக்கு

பாரப்பாவாணவகை சரக்கைக்கேளும்
பரிவான தங்கமொடு நாதசூதம்
நேரப்பாநிமிளையொடு கெந்தியுப்பு
நேரறிந்துகைபாக முறையாய்ப்பார்த்தார்
பேரப்பாஎடுத்ததொரு நவலோகங்கள்
பிலமானவகாரவகைக் கிதுவேயாகுஞ்
சாரப்பாசற்குருவின் பாதங்கண்டு
சங்கையுடன்சவுமியா காரத்தைப்பாரே. 6

சூதம்

பாரடாசற்குருவின் கடாட்சத்தாலே
பதிவாககட்டியதோர் சூதந்தன்னில்
நேரடாகாரியஞ் சரியாய்க்கூட்டி
நேர்மையுடனுமிலொன்று தங்கஞ்சேர்த்து
நீரடாகெந்தியுமே நாலிலொன்று
செம்மையுடன்சூதமெட்டி லொன்றதாகுஞ்

சேரட்டாபொடியாக்கி முப்பிக்கேற்றி
சிவசிவாவாலுகையின் மேலேயேத்தே. 7

ஏத்துநன்றாய்த்தீமூட்டி மைந்தாநீதான்
இன்பமுடன்பதம்பார்த்து செந்தூரித்து
போற்றியேநவலோகம் நூற்றுக்கொன்று
பூட்டடாபன்னிரண்டு மாத்ரமாகும்
பார்த்திபனேவேறுவகை சூதந்தானும்
பரிவாகப்பலமெட்டு யெடுத்துக்கொண்டு
சாத்தியதோர்சங்கமொரு பலமுங்கூட்டி
சங்கையுடன்தெளிவாக யுருக்கிப்பாரே. 8

பாரப்பாவுருக்கியதைப் பொடியாய்ச்செய்து
பார்த்திபனே பதினாலு பலந்தான்கெந்தி
நேரப்பாபொடிசெய்து கூட்டிநீயும்
நேர்மையுடன்குப்பியிலே நிறையைச்சேர்த்து
சேரப்பாவாலுகையி லேந்திமைந்தா
தீர்க்கமுடன்பதம்பார்த்து செந்தூரித்து
காரப்பாயிதையெடுத்து நூற்றுக்கொன்று
காட்டவேநவலோகங் கனகமாமே. 9

ஆமப்பாயிதின்பேர்தான் வாலச்சந்திரன்
அரகராகுன்றியிரு நேரங்கொண்டாற்
காமப்பாமண்டலந்தான் கொண்டாயானாற்
கலைவதிபோற்றேகமது காந்தியாகும்

போமப்பாபட்டையது வுரிந்துபோகும்
　　பூரணமாங்கண்கள்ரெண்டு மொளிவாய்நிற்கும்
தோமப்பாவுடம்புருகி வாலையாகுஞ்
　　சுத்தமுள்ளகர்ப்பமடா விந்துமார்க்கம்
போமப்பாவுண்போர்க்கு சோதிகாணும்
　　பேர்பெரியவேதாந்த சித்தாமே. 10

உபாச சத்தம்

சித்தமுடனுபாசத்தின் சத்துச்சொல்வேன்
　　செயமானநவாச்சாரம் விராகன்ரெண்டு
பத்தியுள்ளவீரமது விராகன்ரெண்டு
　　பதிவானமண்டத்தின் தம்பலமோபத்து
புத்தியுடனண்டநீர் விட்டுஆட்டி
　　பூரணமாய்க்குகையிலிட் டுருக்கச்சத்தாம்
வெற்றியுள்ளசத்து தாரகம்போலே
　　வேகமுடனுருகுமதைக் கண்டுபாரே. 11

துத்தசத்து

பாரப்பாதுத்தசத்து வேதைசொல்வேன்
　　பரிசமுதல்சந்தான தாபதீபம்
நேரப்பாகுதத்தைச் சமனதான
　　நேர்மையுடன்கூட்டிநன்று யுருக்கிப்பாரு
சாரப்பாநாலிலொன்று தங்கஞ்சேர்த்து
　　கருணையுடனுருக்கியதை மணியாவாங்கி
தேரப்பாவந்திடைக்குக் கெந்திசேர்த்து
　　சிவசிவாவொடு செய்து குப்பிக்கேத்தே. 12

எத்துநன்றாய்நாலுகையி லங்கிபூட்டி
யெடுத்துநீசிவந்தான் பதமும்பார்த்து
போற்றிநன்றாய்நவலோகம் நூற்றுக்கொண்டு
பூட்டிஞய்ப றிஜூலு மாத்துமாகு
மாற்றிநன்றாய்வீரமிட்டுச் செந்தாரித்து
மகத்தானசூதமிட் டரைத்துக்கொண்டு
தோற்றியேதார்நூகவிட்டு இரித்துத்தானே
சுத்தமுள்ளநீர்தனிலே துவைத்திடாயே. 13

துவைத்ததொருகிரியெடுத்து தீபமேத்தி
சூழவேகடுதாசி கூடுகட்டிப்
பலித்ததொருநவலோகத் தகடுக்கேதான்
பத்தியமேதார்திரியவித்து தாபங்காட்டில்
தவித்ததொருதகடெல்லாங் கறித்துப்போகும்
தண்மையுடன் தணல்காட்ட.. த்தங்கமாகும்
சிவந்ததொருதாம்பிரமாம் வேதைமார்க்கஞ்
சிரேட்டமுள்ளமாணுக்கா கண்டுகொள்ளே.

காந்த சத்து

கண்டுபார்காந்தமது பலந்தானொன்று
கட்டிபதோராசாரமது பலந்தானைந்து
விண்டுபார்சவ்வீரம் பலந்தானைந்து
வெற்றியுள்ளவெங்காரஞ் சமனாய்ப்போடு
கொண்டதொருசெம்பினி லிட்டுத்தானும்
குறியாகததானுருட்டிக் குகையில்வைத்து

சென்றிடவேசெப்பிலிட் டுருக்கிப்பாரு
சிவசிவாகாரகம்போகும் சத்துப்பாரே. 15

பாரப்பாகாரகம்போற் காந்தமானால்
பதிவாககாயசித்தி யோகசித்தி
நேரப்பாகண்டிடைக்கிரசமுங்கூட்டி
நிசமானசத்திடைக்கித் தங்கங்கூட்டி
சேரப்பாதாலுருக்கி மணியாய்ச்செய்து
தீர்க்கமுள்ளகெந்தகமுஞ் சமனாய்ச்செய்து
காரப்பாபொடிசெய்து குப்பிக்கேத்திக்
கருணையுடன்வாலுகையிற் றீயைமூட்டே. 16

மூட்டிநன்றாய்ச்செந்தூரப் பதத்தைப்பாரு
மோசங்கள்வாராமல் சலாகைப்போட்டு
நீட்டியதோர்சலாகைமுனைக் காப்புகண்டால்
நிலைத்ததொருசெந்தூரம் பதமாய்ச்செய்து
பூட்டியதோரீசான்யம் பூசைசெய்து
புகழாகக்குழைகளைதபின் னிரக்கிப்பாரு
ஆட்டியதோராருணைப் போலவாகு
மந்திசந்தியிரண்டுகுன்றி தின்னு திண்ணே.

திண்ணடாமண்டலத்திற் காயசித்தி
சிவசிவா அருணைப்போற்றேகமாகும்
எண்ணடாசோதிவெகு காந்தியாகுங்
கலகலத்தந்தமெல்லா மிறுகிப்போகும்

எண்ணடாகோடான கோடிபேர்க
ளிதையறிந்து குருமுடிக்கத்திகைத்துநின்றார்
பொன்னடாபொன்னதனைக் காணவென்றுப்
பூட்டுகிறவகையதனைப் புகலக்கேளே. 18

காந்த செந்தூரம்

கேளடாகாந்தசத்து நாகமொன்று
கொடியானதங்கமொன்று ரசந்தானொன்று
நாளடாமூன்றுமொன்று யுருக்கும்போது
நல்லதொருநாகமது மூன்றுபோடு
காலடாபகையமர்ந்து கட்டிப்போகுங்
கருணையுடனின்றுருகி மணியுமாகும்
ஆளடாயிந்திடைக்கி கெந்திகூட்டி
அப்பனேநாலுவித வைப்புஞ்சேரே. 19

சேரப்பாபொடித்தல்லோ குப்பிற்றாக்கி
திறமாகவாலுகையில் நீற்றிக்கொண்டு
நேரப்பாநவலோகம் நூற்றுக்கொன்று
நீட்டவேபன்னிரண்டு மாத்துமாகுந்
தேரப்பாமயங்காதே பொன்னைக்காத்து
தீர்க்கமுடன்குளிக்கல் விட்டரைத்ததின்பின்
நீரப்பாஅருசசத்து சமனாய்ச்சேர்த்து
நீற்றியதுபதமாக வெடுத்துப்பாரே. ?

### பூநகாச் சத்து

பாரப்பா பூநகாச் சத்துச்சொல்வேன்
பறிவாகபூமிவேர் தன்னைவாங்கி
சேரப்பாவுலர்த்திநன்றாய்ப் பொடியேசெய்து
செயமான சாரமது மிடைகளஞ்சி
காரப்பாசவ்வீர மிடைகளஞ்சி
கட்டான வெங்கார மிடைகளஞ்சி
தேரப்பாயிதுவெல்லாஞ் செயநீர்தன்னால்
செம்மையுடன் வாத்துருட்டிக்குகையில்வையே.

வைத்துநன்றாய்சில்லிலிட்டு வுருக்கிப்பாரு
மார்க்கமுடன் மணிமணியாய்ச்சத்துவீழும்
வைத்தநல்லோமணியெல்லா முருக்கிப்பார்க்க
மகத்தான வயிறம்போற் பளபளக்குங்
கைத்ததொரு பூநாக சத்திதன்றானுங்
கருணையுடன் காசிடையா முருட்டிமைந்தா
நைத்ததொரு நாகமந்திடையே போட்டு
நல்லகருவிரண்டுமொன்று யுருகும்பாரே. 22

பாரப்பாவப்படியே வுருக்கிப்பார்க்க
பதிவாகவோரிடை தானுமட்டுஞ்
சாரப்பாகட்டியதோர் நாகமொன்று
சங்கையுள்ள ரூதமொன்று தங்கமொன்று
நேரப்பாயுருக்கியந்த வாங்கிக்கொண்டு
நேராகக்கெந்தகமுங் கூட்டிமைந்தா

தோப்பாகொடியாக்கி குப்பிக்கேற்றி
செமுலைமயுடன்வாலுகையி லேவத்திடாயே. 23

ஏத்தியல்லோதீயெரித்து செக்திரித்தா
லென்னசொல்வேன் நவலோகநூற்றுக்கொன்று
சாத்தியல்லோதானுருக்கிப் பார்த்தால்மைந்தா
சங்கையுடன்பதினாறு மாத்துக்காணும்
கூற்றனுனைகாண்பதற் கஞ்சுவான்பார்
குருவருளால்பராசக்தி பாதந்தன்னைப்
போற்றியேயாரவைத்துப் பார்த்தாலுந்தான்
புண்ணியர்க்குரசவாதப் புகழுண்டாமே. 24

## அகஸ்தியர் ஊத்துமுறை-24

முற்றிற்று.